உ

கடவுள்துணை.

# யாப்பிலக்கணம்.

திருத்தணிகை
விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றியது.

S. அனவரதவிநாயகம் பிள்ளை, M. A.,
அவர்கள் பரிசோதித்தது.

சென்னை:
ரிப்பன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1906.

# யாப்பிலக்கணப் பதிப்புரை.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில், இச்சென்னைமாநகரில, திருத்தணிகை விசாகப்பெருமாளைய ரெனவும், சரவணப் பெருமாளைய ரெனவும் இருவர் புலவர் விளங்கினர். இவ்விருவரும திருவாவடுதுறைக் கச்சியப்ப முனிவரிடத்திற் றமிழ்கற்ற திருத்தணிகைக் கந்தப்பையரென்னும் வீரசைவ சிகாமணியின செல்வக்குமாரர்கள். இவர்கள் தமிழ்க்காகச் செய்த நன்மையை அளவிட்டுரைக்க முடியாது. திருக்குறள் நைடதம் பிரபுலிங்கலீலை முதலிய நூல்களுக்கு உரைசெய்து வைத்ததன்றி இலக்கணத்தை விளக்கச் சில நூல்களும் இவர்கள் பெயரால் வெளிவந்திருக்கின்றன. தற்காலத்து ஜனபிப்பிராயத்தை யொட்டி இலக்கணத்தை யிருவர் தலையிலும் ஏற்றவேண்டியிருக்கிறதே யொழிய அச்சிட்டுக்காணும் நூலகத்து இதற்கு ஆதாரம் சிறிதுமில்லை.

கி. பி. 1828 - ல் வெளிப்பட்ட இலக்கணச்சுருக்க வினாவிடை யென்னும் நூல் மிக விரிந்தது. எழுத்துச் சொற் பொருள் யாப்பு அணியென்னும் ஐந்திலக்கணங்களையும் எடுத்துச்சொல்வது. இந்நூல் திருத்தணிகை விசாகப்பெருமாளையர் பெயரால் வெளிப்பட்டிருக்கின்றது. இந்நூற்குச் சிறப்புப்பாயிரம் "இந்நூலாசிரியர் விசாகப்பெருமாளையர்க் கிளவலாகிய சரவணப்பெருமாளையராற் சொல்லப்பட்டது" என அந்நூன் முதற்பக்கங்களிற் பொறிக்கப்பட்டுமுளது. நூலாசிரியர் தற்சிறப்புப்பாயிரங் கூறும் பொழுதும் "அலகில் சீரெழுத் தாதியைந்தைகுவ னமைந்தே", என்றனர். அணியிலக்கணம் அது காறும் தமிழிலுள்ள அணியிலக்கணங்களைத் தழுவாது வடமொழிச் சந்திராலோகத்தைப்பின்பற்றி எழுதப்பட்டபடியால் இலக்கணச்சுருக்க வினாவிடை யாசிரியர் வடமொழி வல்லாருதவி பெற்றப்பாகத்தை யெழுதினரென்பதற்கு "இதனுள் அணியிலக்கணம் புதூர் சீதாராம சாஸ்திரியாராற் பரிசோதிக்கப்பட்டது"

என்னும் வாக்கியம் சான்று பகரும். இதனாலெல்லாம் விசாகப்பெருமாளையரே வினாவிடை முழுதிற்கும் ஆசிரியரென்பதும், சரவணப்பெருமாளையர் ஆசிரியரல்லரென்பதும் தெளிவாக விளங்கும்.

இனி, சின்னாட் சென்றபின் வினாவிடைக்கண் தமிழ் கற்பார் ஆதரவு குன்றியதுபோலும், வினாவிடை யாசிரியர் தாமே பாலபோதவிலக்கணம் என வேறொரு நூல் செய்தனர். இந்நூலின் ஐந்தாம் பதிப்பு கி. பி. 1870-ல் அச்சிடப்பட்டது ஒருபிரதி கண்டேன். இப்பாலபோத விலக்கணத்து யாப்பும் அணியும் காணப்படினும், எழுதியவா எழுத்தாகு சொல்லுந்தான் எழுதியதாகத் தோன்றுகின்றது. இதற்கு அதனுள், "இந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், புணரச்சியதிகாரம், தொடர்மொழி யதிகாரம் என நான்கதிகாரங்களாக வகுக்கப்படும்" என்னும் வாக்கியமே சான்று. அன்றியும், தொடர்மொழி யதிகாரத் திறுதியில் "தொடர்மொழி யதிகாரம் முற்றுப்பெற்றது. திருத்தணிகைக்கந்தப்பையாகுமாரராகிய விசாகப்பெருமாளையரால் இயற்றப்பட்ட பாலபோத விலக்கணம் முடிந்தது முற்றும்" எனறு வரும் வாக்கியமும் இதனை நிறுத்தும். யாப்பதிகாரமும் அணி யதிகாரமும் வினாவிடையி லுள்ள படியே வினாக்களை மட்டுந் தள்ளி அச்சிட்டுச் சேர்க்கப்பட்டன போலும்.

நாமிங்குப் பதிப்பிக்க எடுத்துக்கொண்டது இலக்கணச் சுருக்கத்துக் காணப்படும் யாப்பிலக்கண வினாவிடையே. பாலபோத விலக்கணத்தில் நூதனமாகக் காணப்படும் சில உதாரணச் செய்யுள்களும் தக்கவிடத்திற் சேர்க்கப்பட்டன. யாப்பிலக்கணத்தில் உதாரணச் செய்யுள்கள் 77-வரை காட்டப்பட்டிருக்கின்றன.

இந்நூலாசிரியர் விளங்கியது சென்ற நூற்றாண்டி லாயினும் இவரது சரித்திரம் யாண்டும் கோத்து எழுதப்பட்டிராமை நம்மனோர்க்குப் பொதுவாகச் சரித்திரங்களிடத்துள்ள

ஆசிரத்தையைக் காட்டும். இவ்வணியிலக்கணத்தைச் சில வாண்டுகளின் முன் தனிநூலாக வெளிப்படுத்திய தமிழ்ப் பண்டிதர் ஈக்காடு இரத்தினவேலு முதலியாரவர்கள் இந்நூலாசிரியரது பிறப்பு வரலாற்றை ஒருவாறு கூறியிருக்கின்றனர். அது வருமாறு. "திருத்தணிகைப்பதியில், வீரசைவ குலோத்பவராய்க் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்து, திருவாவடு துறையாதீனத்துக் கச்சியப்பமுனிவர் வழியிலிலக்கிய விலக்கணங்களை யாராய்ந்த சந்தப்பையரென்பவ ரொருவரிருந்தனர். அவர் இல்லறமேற்கொண்டு சில்காலொழுகி மகப்பேறடையாது மனமாழ்கி, தன் மனைவி தெய்வயானையம்மையோடுடன் பிறந்த வள்ளியம்மையையு மணந்து பின்னுஞ் சிலவருடங்கள் கழிந்து, இருவரி லொருவர்பாலும் புத்திரோற்பவங் கைகூடாது கவலைக்கடலுளாழ்ந்து, தமது சீடர்கட்குக் கல்வி பயிற்றுவதிலேயே மனத்தைச்செலுத்தி ஒருவாறு துணிவு கொண்டனர்.

"இவரிங்ஙனமிருக்க: இவர் மனைவியரிருவருந் தணிகையம்பதிக் கருகிலுள்ள ஊருணியொன்றினின்று நீர் முகந்து வரச் செல்லுகையில், அவர்கள் கட்புலனுக்குத் தோற்றிய வேங்கடமலையை நோக்கித் தணிகாசலபதியை வெறுத்தார் போல, இச்செங்கல்வராயனுக்கு நம்மீது கருணையில்லைபோலும், இனி வேங்கடத் திறைவனேனும நமக்கு நன்மக்களை யருளானு மெனச் சப்பாஷித்துச்சென்று, நம்மிடத்துக்குழந்தை யுதிப்பின், திருமாலின் பெயரை யதற்களித்துமெனத் தீர்மானித்துக்கொண்டு வீட்டையடைந்தனர். சின்னாட் சென்ற பின்னர் அவ்விரு சகோதரிகளுங் கருப்பவதிகளாய் முறையே ஒவ்வொருஆண்மகவைப் பெற்றனர். அப்பிள்ளைகள் ஒருவர்க்கொருவர் ஒருநாளின் வித்தியாசத்தாலேயே மூத்தோரிளையோ ரெனப்பட்டனர். அவ்விரு சிறார்க்குந் தந்தை தமது மரபின்படி விசாகன் சரவணன் என நாமகரணஞ் செய்ய யத்தனிக்கையில், அவர் மனைவியர் திருப்பதிமலையைக்கண்டு தங்களுட் டீர்மானித்த வகையை வெளியிட, ஐயர

வர்கட் கிணங்கித் தாம் விரும்பிய நாமங்களுடன் பெருமா
ளென்பதைப் புணர்த்தினார். அதனால் விசாகப்பெருமாளையர்
சரவணப்பெருமாளையரென வழைக்கப்பட்டனர்.

“இச்சகோதரர்களிருவரும் மிக்க ஒற்றுமை யுடையரா
ய்த் தமது தந்தையாரிடம் பல நூல்களைக் கற்று, பின்னாச்
சென்னை நகரை யடைந்து சஞ்சீவிராயன்பேட்டையில் வா
ழ்ந்திருந்த இலக்கணக்கடலாகிய இராமாநுஜ கவிராயரிடம்
நன்னூல் முதலிய பன்னூல்களும் பயின்று கற்றோர் மதிக்
கத்தக்க வித்துவசிகாமணிக ளாயினர்.”

இவ்விருவருள் விசாகப்பெருமாளையர் நெடுங்காலம்
சென்னை யூனிவர்ஸிட்டி யென்னும் சகல சாஸ்திர கல்விச
சாலையில் தமிழ்த்தலைமைப் புலமை நடாத்தினர். சரவணப்
பெருமாளையர் சிலகாலம் நூல்கள்செய்துகொண்டும் மாண
வர்க்குப்பாடஞ் சொல்லிக்கொண்டு மிருந்து இளமையிலே
யே காலஞ்சென்றனர். பல வேதாந்த நூல்கள் செய்தவரும்
சிலநூல்களுக்கு விருத்தியுரை செய்தவருமாகிய ஈசூர் சச்சி
தானந்த பிள்ளையென்பவர் இவரிடத்துத் தமிழ் கற்றவரு
ளொருவர். நன்னூற்கு முதலிற் காண்டிகையுரை செய்தவர்
விசாகப்பெருமாளையர் என்பதும் ஞாபகத்தில் வைக்கத்தக்
கது. இது வெளிப்பட்ட பின்னர்தான் இவராசிரியர் இரா
மாநுஜ கவிராயர் இராமாநுஜ காண்டிகை யெனப்படும் விரு
த்தியுரை யொன்று செய்து கி. பி. 1847-ல் வெளிப்படுத்தி
னர்போலும். ஆறுமுகநாவலர் காண்டிகையும் பின்னர் வெ
ளிப்பட்டதுவே.

தமிழ்ப்பண்டிதர் இரத்தினவேலுமுதலியாரவர்கள் பதி
ப்பு அகப்படுத லருமையாய் விட்டபடியாலும், மதுரைத்
தமிழ்ச் சங்கப்பதிப்பு கருநாடக வொழுங்கை யநுஸரித்தி
ருப்பதால் தற்காலமாணவர்க்குப் பெரும்பயன் செய்யாமை
யாலும் இப்பதிப்பு வெளிப்படுத்தலாயிற்று.

S. A. P.

# யாப்பிலக்கண

# உதாரணச் செய்யுள் முதற்குறிப்பு.

## சீர்கள்.

### ஓரசைச்சீர்.

மலர்மிசையேகி
கற்றதனாலாய

### ஈரசைச்சீர்.

வேதப்பொருளாய்

### மூவசைச்சீர்.

ஆனந்தக்கூத்த
மண்ணீரனல்

### நாலசைச்சீர்.

அள்ளற்பள்ளத்

---

## தளைகள்.

தேனார்கஞ்சச்
பெரியவர்தங்நோய்
மண்ணீரனல்
அஞ்சயபோனடை

---

## தொடைகள்.

### எதுகைத்தொடை.

துகடீர்பெருஞ்
சொற்போர்புரிவ
பொன்னினன்ன
வானின்றுலக
ஆவாவென்றே
தக்கார்தகவில

### மோனைத்தொடை.

கற்றுளகல்வியுங்
அடலவேண்டுமைந்

### எதுகைமோனையின்றிவரும் பாட்டு.

பூத்தவேங்கை

---

## வெண்பா.

### குறள்வெண்பா.

உடையார்முன்
கண்ணுதல்காட்சி

### நேரிசைவெண்பா.

கூற்றங்குமைத்த
எற்றான்புள்ளூர்ந்

### இன்னிசைவெண்பா.

துகடீர்பெருஞ்
கடற்குட்டம்போழ்
மழையின்றிமாநில
காதன்மகளிர்
அங்கண்விசும்பி

### சிந்தியல்வெண்பா.

அறிந்தானையேத்தி
போற்றுமின்போற்று

### பஃறொடைவெண்பா.

வையகமெல்லாங்

---

## வெண்பாவினம்.

### குறள்வெண்செந்துறை.

ஆர்கலியுலகத்து

### குறட்டாழிசை.

நண்ணுவார்வினை
அறுவர்க்கறுவரை
வண்டார்பூமகோ

### வெண்டாழிசை.

நண்ணிதென்றுதீய
அம்பேருண்கண்

### வெண்டுறை.

படர்தருசெயவினை
சுற்றிருக்குமடலா

### வெளிவிருத்தம்.

அங்கட்கமலத்தலர்
ஆயாவென்றேயரு

## அகவற்பா.

### நேரிசையாசிரியப்பா.

பெருந்துறைபுகுந்து

### இணைக்குறளாசிரியப்பா.

நின்றண்மையுங்

### நிலைமண்டிலவாசிரியப்பா.

வேரல்வேலிவேர்

### அடிமறிமண்டிலவாசிரியப்பா.

தீர்த்தமென்பது

## அகவற்பாவினம்.

### ஆசிரியத்தாழிசை.

சந்தமுமாகியச்
கன்றுகுணிலாக்

### ஆசிரியத்துறை.

கரைபொருகானியா
இரங்குகுயின்முழ

### ஆசிரியவிருத்தம்.

விடஞ்சூழரவினிடை
கோமுனிவருக்கு
அருவருக்குமலக
வளர்குலாவரு
கைத்தலத்தழக

## கலிப்பா.

### வண்ணக வொத்தாழிசை.

தொல்லுலகப்படிசுடிகை

### அம்போதரங்கவொத்தாழிசை.

மேற்கூறியகலியில்அராகமொழித்துக்காண்க.

### நேரிசை யொத்தாழிசை.

மேற்கூறிய கலியில் அராகத்தையும் அம்போதரங்கத்தையுமொழித்துக்காண்க.

### வெண்கலிப்பா.

சேல்செய்தமதர்வேற்

### கலிவெண்பா.

சுடர்த்தொடீஇ

தரவுகொச்சகக்கலிப்பா.
அருசம்போனடை

தரவிணைக்கொச்சகக்கலிப்பா.
வடிவுடைநெடுமுடி

சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
ரு சதடகைமத

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.
ணமநியோமுகத்

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.
ணிகிளார்நெடுமுடி

## கலிப்பாவினம்.

கலித்தாழிசை.
ருகூற்றருவத்திருந்
ண்டபறையறையப்
செல்லார்பொழிறறில்லை

கலித்துறை.
பானுந்தோழியுமாயமு

கலிவிருத்தம்.
வெய்தலைமீடிய

கட்டளைக்கலிப்பா.
சொல்லினீரிவ

கட்டளைக்கலித்துறை.
லைமலிவாணுத

## வஞ்சிப்பா.

குறளடிவஞ்சிப்பா.
பூந்தாமரைப்போ

சிந்தடிவஞ்சிப்பா.
எறிவெண்டிரைக்கட

## வஞ்சியினம்.

வஞ்சித்தாழிசை.
மணிமென்றபெயராமே

வஞ்சித்துறை.
பேரறிவன்றான்

வஞ்சிவிருத்தம்.
சாநதநேறிபதாழ்

## மருட்பா.

புறநிலைவாழ்த்து.
தென்றலிடைபோழ்ந்த

கைக்கிளை.
திருநுதல்வேர்வரும்

வாயுறைவாழ்த்து.
பலமுறையோம்பப

செவியறிவுறூஉ.
பல்யானைமன்னர்

## நூற்பா.

எழுத்தெனப்படுவ

## கூன்.

உதுக்காண், சுரந்தானு
அவற்றுள், அஇஉஎ.

உ

கடவுள்துணை,

# யாப்பிலக்கணம்.

## யாப்பு.

1. யாப்பென்பது யாது?

மேற் சொல்லிலக்கணத்திற் கூறிய பல சொற்களாலாம் பொருட்கு இடனாகக் கற்றுவல்ல புலவரால் அணிபெறப் பாடப்படுவதாம்.

யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பன ஒருபொருட் சொற்கள்.

2. அஃது எத்தனை வகைப்படும்?

பாவும் பாவினமுமென இருவகைப்படும்.

3. இவ்விரண்டிற்கும் உறுப்பாய் வருவன யாவை?

எழுத்து - அசை - சீர் - தளை - அடி - தொடை என்னும் ஆறும் அவற்றிற்கு உறுப்பாம்.

## 1. எழுத்து.

4. எழுத்துக்களென்பன யாவை?

மேல் எழுத்திலக்கணத்திற் கூறிய முதல் சார்பென்னும் இருவகை யெழுத்துக்களுமாம்.

செய்யுளடிக்கு எழுத்தெண்ணுங்கால் மெய்கள் எண்ணப்படாவாம்.

தனிநிலையாய் வருமிடத்துக் குற்றியலிகரமுங் குற்றிய லுகரமும் அளபெடையுந் தள்ளுண்டுபோம்.

## 2. அசை.

5. அசையென்பது யாது?

எழுத்துக்களால் ஆக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாய் வருவதாம்.

6. அவ்வசை எத்தனை வகைப்படும்?

நேரசையும் நிரையசையுமென இருவகைப்படும்.

### (1). நேரசை.

7. நேரசைகளென்பன யாவை?

குறிலேனும் நெடிலேனுந் தனித்துவரினும், அல்லது ஒற்றடுத்துவரினும் நேரசைகளாம்.

உதாரணம். ஆழி

இம்மொழியில், நெடிலுங் குறிலுந் தனித்து நேரசையாயின.

சொல்வான்

இம்மொழியில், குறிலும் நெடிலும் ஒற்றடுத்து நேரசையாயின.

அன்றியும் [illegible] மொழியல்லது தனிக்குறில் மொழிக்கு முதலில் நேரசை யாகாது

### (2) நிரையசை.

8 நிரையசைகளென்பன யாவை?

குறிலிணையேனுங் குறில்நெடிலேனுந் தனித்துவரினும், அல்லது ஒற்றடுத்துவரினும் நிரையசைகளாம்.

உ-ம். அணி - அணில்; குரா - குரால் எனவரும்.

## 3. சீர்.

9. சீரென்பது யாது?

அசைகள் சிறுபான்மை தனித்தும் பெரும்பாலும் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்தும் வருவதாம்.

10. அசைச்சீர் எத்தனை வகைப்படும்?

ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் மூவசைச்சீரும் நாலசைச்சீரும் என நான்கு வகைப்படும்.

### (1). ஓரசைச்சீர்.

11. ஓரசைச்சீர்களென்பன யாவை?

தனித்துவரும் நேரசையும் நிரையசையுமாகிய இரண்டுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு:

நேர் - நாள். நிரை - மலர்.

இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலும் சிறுபான்மை ஒழிந்தவற்றுள்ளும் வரும்.

உ-ம். "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்." (1)

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" (2)

இக்குறள் வெண்பாக்களின் இறுதியில், வார் - நாள், ரெனின் - மலர் என ஓரசைச்சீரிரண்டும் வந்தன காண்க.

### (2). ஈரசைச்சீர்.

12. ஈரசைச்சீர்களென்பன யாவை?

நேர்நேர் - நிரைநேர் - நிரைநிரை - நேர்நிரை என இரண்டசை கூடிவருதலாகிய சீர் நான்குமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு :

நேர்நேர் - தேமா. நிரைநேர் - புளிமா.

நிரைநிரை - கருவிளம். நேர்நிரை - கூவிளம்.

இவை அகவற்கே உரியவாய் இயற்சீரெனவும், அகவற் சீரெனவும் பெயர் பெறும்.

உ-ம். "வேதப் பொருளாய் விளங்கிய சங்கரன்
பாதத் துணைமனம் பற்றுவோர்
போதத் தொளிர்நலம் பொருந்திவாழ் குவரே" (3)

இவ்வகவலுள், வேதப்-தேமா, பொருளாய் - புளிமா, விளங்கிய - கருவிளம், சங்கரன் - கூவிளம் என ஈரசைச்சீர் நான்கும் வந்தன காண்க. பிறவும் அன்ன.

## (3). மூவசைச்சீர்.

13. மூவசைச்சீர்களென்பன யாவை ?

மேற்சொல்லப்பட்ட நேர்நேர் முதலிய நான்கின் இறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனி கூடிவருதலா லாகிய எட்டுச்சீர்களுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு :

நேர்நேர்நேர் - தேமாங்காய்.
நிரைநேர்நேர் - புளிமாங்காய்.
நிரைநிரைநேர் - கருவிளங்காய்.
நேர்நிரைநேர் - கூவிளங்காய்.
நேர்நேர்நிரை - தேமாங்கனி.
நிரைநேர்நிரை - புளிமாங்கனி.
நிரைநிரைநிரை - கருவிளங்கனி.
நேர்நிரைநிரை - கூவிளங்கனி.

இவ்வெட்டும் உரிச்சீரெனவும், இவற்றுட் காய்ச்சீர் நான்கும் வெண்பாவிற்கு உரியவாய் வெண்சீரெனவும், கனிச்சீர் நான்கும் வஞ்சிப்பாவிற்கு உரியவாய் வஞ்சிச்சீரெனவும் பெயர் பெறும்.

உ-ம். "ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
யீனந் தனையொழிவா யின்று." (4)

இக்குறள் வெண்பாவினுள், ஆநந்தக் - தேமாங்காய், கூத்த - தேமா, னடிக்கன்பு - புளிமாங்காய், செய்மனனே - கூவிளங்காய், யீனந் - தேமா, தனையொழிவா - கருவிளங்காய், யின்று - காசு எனக் காய்ச்சீர் நான்கும் வந்தன காண்க.

"மண்ணீரனல் வளிவானொடு
வெண்ணீர்மதி வெங்கதிருயி
ரெண்ணீருரு விமையபசுபதி
நாளும்
என்மன மிடங்கொண் டுறைதலால்
வன்மனக் கொடியர்சொற் றிமையாகு குதலே." (5)

இவ்வஞ்சிப்பாவினுள், மண்ணீரனல் - தேமாங்கனி, வளிவானொடு - புளிமாங்கனி, வெண்ணீர்மதி - தேமாங்கனி, வெங்கதிருயி - கூவிளங்கனி, ரெண்ணீருரு - தேமாங்கனி, விமையபசுபதி - கருவிளங்கனி எனக் கனிச்சீர் நான்கும் வந்தன காண்க.

## (4). நாலசைச்சீர்.

14. நாலசைச்சீர்களென்பன யாவை?

அம் மூவசைச்சீர் எட்டன் இறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனி யடுத்து வருதலாலாகிய சீர் பதினாறுமாம்.

இவற்றிற்கு உதாரண வாய்பாடு:

தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ.
கருவிளந்தண்பூ, கூவிளந்தண்பூ.
தேமாநறும்பூ, புளிமாநறும்பூ.
கருவிளநறும்பூ, கூவிளநறும்பூ.
தேமாந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல்.
கருவிளந்தண்ணிழல், கூவிளந்தண்ணிழல்.
தேமாநறுநிழல், புளிமாநறுநிழல்.
கருவிளநறுநிழல், கூவிளநறுநிழல்.

இவை வெண்பாவினுள் வருவனவல்ல.

கலியினுள்ளும் அகவலுள்ளும் பெரும்பாலுங் குற்றியலுகரம் வந்த விடத்தன்றி வாரா.

வஞ்சிப்பாவினுட் பெரும்பாலும் வரவும் அடியுள் இரண்டு நாலசைச்சீர் கண்ணுற்று நிற்கவும் பெறும்.

உ-ம். “அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயின் வியன்குன்றூரன்.” (6)

இவ் வஞ்சியடியில் இரண்டு நாலசைச்சீர் வந்தன காண்க.

## 4. தளை.

15. தளையென்பது யாது?

நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனுங் கூடிநிற்பதாம்.

நேர்முன் நேரும், நிரைமுன் நிரையும் வருதல் ஒன்றி வருதலாம்.

அவ்வாறன்றி நேர்முன் நிரையும், நிரைமுன் நேரும் வருதல் ஒன்றாது வருதலாம்.

16. அத்தளை எத்தனை வகைப்படும்?

நேரொன் றாசிரியத்தளை - நிரையொன் றாசிரியத்தளை - வெண்சீர் வெண்டளை - இயற்சீர் வெண்டளை - ஒன்றிய வஞ்சித்தளை - ஒன்றா வஞ்சித்தளை - கலித்தளை என எழுவகைப்படும்.

17. அவை யெவ்வாறு வருவனவாம்?

(1). நேரொன் றாசிரியத்தளை.

மாமுன் நேர்வருவது. நாண்முன் நேர்வருவதும் அது.

(2). நிரையொன் றாசிரியத்தளை.

விளமுன் நிரைவருவது. மலர்முன் நிரைவருவதும் அது.

(3). வெண்சீர் வெண்டளை.

காய்முன் நேர்வருவது. பூமுன் நேர்வருவதும் அது.

(4). இயற்சீர் வெண்டளை.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது. நாண் முன் நிரைவருவதும் மலர்முன் நேர் வருவதும் அது.

(5). ஒன்றிய வஞ்சித்தளை.

கனிமுன் நிரை வருவது. நிழல் முன் நிரைவருவதும் அது.

(6). ஒன்றா வஞ்சித்தளை.

கனிமுன் நேர்வருவது. நிழல் முன் நேர்வருவதும் அது.

(7). கலித்தளை.

காய்முன் நிரைவருவது. பூமுன் நிரை வருவதும் அது.

உ-ம். "தேனார் கஞ்சச் செம்மலரில்
வானோர் மாதர் மங்கலங் களர்ந்திடை

வலியோடு நிலைபெறு மலிபெருங் கருணையி
னலைதரு மிருள்விட மணிமிடற் றிருத்துந்
தில்லையுட் சிவபிரான் றிருவடி
யொல்லையிற் பாசநாக் குயர்கதி யெளிதே." (7)

இவ்வகவலுள், தேனுர் + கஞ் என மாமுன் நேர் வருதலால் இது நேரொன்றாசிரியத்தளையாம். மங்கலங் + களக என விளமுன் நிரை வருதலால் இது நிரையொன்றாசிரியத்தளையாம்.

"பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்." (8)

இந் நேரிசைவெண்பாவினுள், பெரியவர்தந் + நோய் எனக் காய்முன் நேர் வருதலால் இது வெண்சீர் வெண்டளையாம். நோய்போற் + பிறர் என மாமுன் நிரை வருதலால் இது இயற்சீர் வெண்டளையாம். பிறவும் அன்ன.

"மண்ணீரனல் வளிவானொடு
வெண்ணீர் மதி,... . .... " (9)

என்னும் வஞ்சிப்பாவினுள், மண்ணீரனல் + வளி எனக் கனிமுன் நிரை வருதலால் இது ஒன்றிய வஞ்சித்தளையாம். வளிவானொடு + வெண் எனக் கனிமுன் நேர் வருதலால் இது ஒன்றா வஞ்சித்தளையாம். பிறவும் அன்ன.

"அஞ்சம்போ னடையுமையா ளகமகிழ்ப்பச் சார்பரவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவா கரங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொதுவி னடமாடுங்
கஞ்சத்தாழ் திருவடிகள் கருதிமட னொழிநெஞ்சே." (9)

என்னும் இக்கொச்சகக் கலிப்பாவினுள், அஞ்சம்போ + னடை எனக் கனிமுன் நிரை வருதலால் இது கலித்தளையாம். பிறவும் அன்ன.

## 5. அடி.

18. அடியென்பது யாது ?

மேற்சொல்லப்பட்ட சீர்கள் ஒன்றும் பலவும் அடுத்துவருவதாம்.

19. அவ்வடி எத்தனை வகைப்படும் ?

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்துவகைப்படும்.

20. அவ்வடி எத்தனை வகைப்படும் ?

(1). குறளடி இருசீரான்வருவது. (2). சிந்தடி முச்சீரான்வருவது. (3). அளவடி அல்லது நேரடி நாற்சீரான் வருவது. (4). நெடிலடி ஐஞ்சீரான் வருவது. (5). கழிநெடிலடி ஐந்தின் மேற்பட்ட சீரான் வருவனவெல்லாம். இவற்றிற்கு இலக்கியம் பின் பாவும் இனமுங் கூறும் வழிக் காண்க.

## 6. தொடை.

21. தொடையென்பது யாது ?

பல அடிகளின்மேலும் பல சீர்களின்மேலும் எழுத்துக்கள் ஒன்றி வருவதாம்.

22. அத்தொடை எத்தனை வகைப்படும் ?

எதுகைத் தொடையும் மோனைத் தொடையுமென இருவகைப்படும்.

### (1). எதுகைத்தொடை.

23. எதுகைத் தொடையென்பது யாது ?

அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்ப இரண்டாமெழுத்து ஒன்றிவருவது எதுகைத் தொடையாம்.

உ-ம். "துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்." (10)

இவ்வின்னிசை வெண்பாவினுள் இரண்டாமெழுத்தொன்றி வருதல் காண்க. அன்றியும்,

"சொற்போர் புரிவர் நான்மறையா
ரகமுணர்ந்த தொழுகுலத்தோர்
விற்போர் புரிவர் நெடியசிலை
யிராம னனைய விறல்வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர்பொருளுஞ்
சமம்போற் பேணிப் புரிவணிகர்
நெற்போர் புரிவ ரங்கவிலை
வேளாண் குலத்து நெறியினரே." (11)

என முதலாமெழுத்து முதலியன ஒத்து வருதலுங் கொள்க. ஒரோவிடத்து ஓரடியுள்ளுஞ் சீர்களின் இரண்டாமெழுத்து ஒன்றி,

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்தி," (12)

என வருதலும் உண்டு.

சிறுபான்மை வருக்கவெழுத்தும், நெட்டெழுத்தும், இனவெழுத்தும், பிறவும் எதுகையாக வரப்பெறும்.

உ-ம். "வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று." (13)

இது வருக்கவெதுகை.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்." (14)

இது நெடிலெதுகை.

“தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.” (15)

இது வல்லினவெதுகை.

### (2). மோனைத்தொடை.

24. மோனைத்தொடை யென்பது யாது?

முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களில் ஒன்றனுள்ளேனும் பலவற்றினுள்ளேனு முதலெழுத்து ஒன்றிவருவது மோனைத்தொடையாம்.

உ-ம். “கற்றன கல்வியுந் திருவு மாற்றலுந்
தர்மெறு மறலியைத் தடுப்ப வல்லவா
முற்றெருங் குணர்பசு பதியை முன்னுற
உற்றநா ளொழிகிலெ முணர்வி லிக்கவோ:” (16)

இச்செய்யுளின் முதலடியில் ககரமும், இரண்டாமடியில் தகரமும், மூன்றாமடியில் முகரமும், நாலாமடியில் உகரமும் மோனையாகவந்தன. அன்றியும்,

அ-ஆ-ஐ-ஔ.

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

இ-ஈ-எ-ஏ.

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

உ-ஊ-ஒ-ஓ.

என்னும் இந்நான்கும் ஒன்றற்கொன்று மோனையாம்.

ஞ-ந வும், ச-த வும், ம-வ வும்

ஒன்றற்கொன்று மோனையாம்.

உ-ம். “அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.” (17)

இதன் முதலடியில் அகரத்திற்கு ஐகாரம் மோனையாயிற்று. மோனை அனு என்பன ஒருபொருட் சொற்கள்.

25. எதுகை மோனையின்றி வரும் பாட்டுகளும் உளவோ?

அவ்வாறு வரும் பாட்டுகளுஞ் சிலவுளவாம்.

உ-ம். "பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே." (18)

என வரும்.

## பா.

26. பா என்பது யாது?

இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்பட்டு வெண்பா முதலிய பெயர்பெற்று வருவதாம்.

27. அப்பாவானது எத்தனை வகைப்படும்?

வெண்பாவும் அகவற்பாவும் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் ஆகிய நான்கனோடு, மருட்பா நூற்பா என்னும் இரண்டுங்கூடி அறுவகைப்படும்.

இவற்றுள் முன் நான்குமே சிறப்புடையவாம்.

## பாவினம்.

28. அந்நான்கு பாவிற்கும் வரும் இனங்கள் யாவை?

தாழிசை துறை விருத்தமென ஒவ்வொன்றற்கும் மும்மூன்றாம்.

## வெண்பா.

29. வெண்பாவிற்கு இலக்கணமென்னை?

ஈற்றடி மூச்சீரடியாகவும், ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்று, காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையுங்கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெறாது, காசு-பிறப்பு-நாள்-மலர் எனனும் வாய்பாட்டான முடிவது பொதுவிலக்கணமாம்.

30. அவ்வெண்பா எத்தனைவகைப்படும் ?

குறள் வெண்பா-நேரிசைவெண்பா - இன்னிசைவெண் பா-சிந்தியல்வெண்பா-பஃறொடை வெண்பா என ஐந்து வகைப்படும்.

## 1. குறள்வெண்பா.

31. குறள்வெண்பா எவ்வாறு வரும் ?

இரண்டடியாய் ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத் தாலேனும் வரும்.

### (1). ஒருவிகற்பக்குறள் வெண்பா.

உ-ம். "உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்" (19)

இது ஒரு விகற்பக் குறள்வெண்பா. மலரென முடிந் தது.

### (2). இருவிகற்பக்குறள்வெண்பா.

உ-ம். "கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெஃகூறறின் றேற்றங் கொளல்." (20)

இது இருவிகற்பக்குறள் வெண்பா.

## 2. நேரிசைவெண்பா.

32. நேரிசைவெண்பா எவ்வாறு வரும் ?

நான்கடியாய் இரண்டாமடி யிறுதிச்சீர் தனிச்சொல லாய்வர, அடிமுழுதும் எதுகையாகவேனும் முன்னிர

ண்டும் ஒரெதுகையும்பின்னிரண்டும் மற்றோரெதுகையுமாக வேறுபட வரும்.

(1). ஒருவிசற்ப நேரிசைவெண்பா.

உ-ம். "கூற்றங் குமைத்த குரைகழற்கா றகும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற் - சீற்றஞ்செய்
யேற்றினான் றில்லை யிடத்தினா னென்னினியாம்
போற்றினா னல்குமப் பொருள்." (21

இது ஒரு விகற்ப நேரிசைவெண்பா.

(2). இருவிகற்ப நேரிசைவெண்பா.

"ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தா
னீற்றா னிழன்மணி வண்ணத்தான் - கூற்றொருபா
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு." (22

இது இருவிகற்ப நேரிசைவெண்பா. காசு என்னும் வாய்பாட்டான் முடிந்தது.

## 3. இன்னிசை வெண்பா.

33. இன்னிசைவெண்பா எவ்வாறு வரும்?

ஒரு விகற்பத்தாலேனும் பல விகற்பத்தாலேனும் நான்கடியாய்த் தனிச் சொல்லின்றி வரும்.

(1). ஒரு விகற்ப இன்னிசை வெண்பா.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்காற் போல வரும்." (10)

இது தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

(2) பலவிகற்ப இன்னிசை வெண்பா,

"கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்." (23)

இது தனிச்சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. அன்றியும்,

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை - மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை - தவமு
மரசிய லில்வழி யில்லை - யரசனு
மில்வாழ்வா ரில்வழி யில்." (24)

என அடிதோறுந் தனிச்சொற் பெற்று வருவதும்,

"காதல மகளிர் கலசக் கலக்குண்டு
பேதுற்றா நெஞ்சம் பிழைத்தகன்றோர் நன்னெஞ்சம்
போதம் படரும் புலியூரே - தாதுண்டு
வண்டறங்கு நீள்சடையோன் வைப்பு," (25)

என மூன்றாமடியிறுதி தனிச்சொற் பெற்றுவருவதும்,

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் - றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்." (26)

என இரண்டாமடியிறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வருவதும், பிறவாறு நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு வருவனவும் இன்னிசை வெண்பாவாம்.

## 4. சிந்தியல் வெண்பா.

34. சிந்தியல்வெண்பா எவ்வாறு வரும்?

மூன்றடியாய் நேரிசைவெண்பாவைப்போல வருவது நேரிசைச்சிந்தியல் வெண்பாவென்றும், இன்னிசை வெண்

பாவைப்போல வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்ட வெண்றாம பெபாபெற்று வரும்.

### (1). நேரிசைச் சிந்தியல் வெண்பா.

உ-ம். "அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தாரகுச செய்வனுரைப்பச் - சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு." (2

இது நேரிசைச்சிந்தியல வெண்பா.

### (2). இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

"போற்றுமின போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றம் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுகந்தான் பொற்று ளிணை." (2

இது இன்னிசைச சிந்தியல் வெண்பா.

## 5. பஃறொடை வெண்பா.

35. பஃறொடைவெண்பா எவ்வாறு வரும்?

நான்கடியின் மிக்க பலவடிகளைப் பெற்றுவரும்.

உ-ம். "வையக மெல்லாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறே யந்நாட்டிற் றலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்." (2

இது ஏழடிப் பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

## வெண்பாவினம்.

36. குறள்வெண்பாவிற்கு இனம் யாவை?

குறள்வெண் செந்துறையுங் குறட்டாழிசையும் இ. டமாம்.

## (1). குறள்வெண்செந்துறை.

37. குறள்வெண் செந்துறை எவ்வாறு வரும்?

விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாகி எனைத்துச் சீரானும் அளவொத்த இரண்டடியாய் வரும்.

உ-ம். "ஆகலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை." (30)

## (2). குறட்டாழிசை.

38. குறட்டாழிசை எவ்வாறு வரும?

நாற்சீரின் மிக்க பலசீரான் வரும் அடி இரண்டாய் ஈற்றடி குறைந்துவருவனவும், விழுமியபொருளும் ஒழுகிய வோசையு மின்றிக் குறள்வெண் செந்துறையிற் சிதைந்து வருவனவும, வேற்றுத்தளை விரவிய குறள்வெண்பாவுமென மூன்றுவகைப் பட்டு வரும்.

உ-ம். "நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞா
கண்ணிறைனடியே யடைவார்கள் கற்றவரே." (31) [னநற்

எனவும்,

"அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினிபோல வையிரே." (32)

எனவும்,

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி." (33)

எனவும் வரும்.

## 1. வெண்டாழிசை.

39. வெண்பாவினம் மூன்றனுள் வெண்டாழிசை எவ்வாறு வரும்?

மூன்றடியாய் முதலிரண்டடியும் நாற்சீராயும் ஈற்றடி யொன்றும் வெண்பாவைப்போல முச்சீராயும் முடிவுபெறறு வேற்றுத்தளை விரவி வருவனவும், சிந்தியல்வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவனவுமென இருவகைப் பட்டு வரும்.

உ-ம். "நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்." (3

இது மூன்றடியால் வந்த வெண்டாழிசை.

"அம்பேருண் கண்ணார்க்கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல.

வாணேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்." (35)

இது சிந்தியல்வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்த வெள்ளொத்தாழிசை.

## 2. வெண்டுறை.

40. வெண்டுறை எவ்வாறு வரும்?

மூன்றடிமுதல் ஏழடி யீறுகப் பின்பு நின்ற சிலவடிகளிற் சிலசீர் குறைந்துவரும். இவற்றுள் எல்லா அடியும் ஓரோசையாய் வருவனவன்றியு முன்பிற்சில அடிகளோரோசையாயும் பின்பிற் சிலவடிகள் மற்றோரோசையாயும் வருதலுமுண்டு.

உ-ம். "படர்தருவெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப்
பவத்தொடர்பாற் படரா நிற்கும்
விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக்
கழிவுண்டோ வினையேற் கம்மா
விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே
னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ." (36)

இது நான்கடியாய்ப் பின் இரண்டும இருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

"கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக்
கொழுந்தேன் பில்கி
யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத்
தொருதா ளூன்றி
வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத்
துண்டமா டப்புலித் தோலுமா டப்பணி
ரண்டமா டக்குழைந் தகிலமா டக்கருங்
கொண்டலோ டுங்குழற் கோதையோ டுங்கறைக்
கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ." (37)

இது எழடி வேற்றொலி வெண்டுறை.

## 3. வெளி விருத்தம்.

41. வெளிவிருத்தம் எவ்வாறு வரும்?

மூன்றடியினாலேனும் நான்கடியினாலேனும் முற்றுப் பெற்று அடிதோறும் இறுதியில் ஒரு சொல்லையே தனிச் சொல்லாகக் கொண்டுவரும்.

உ-ம். "அங்கட் கமலத் தலர்கமல மேயீரு நீரேபோலுங்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயீரு நீரேபோலுங்
இங்கட்சடையீருந் தில்லைவனத் துள்ளீரேநீரேபோலும்." (38)

இது மூன்றடியால் வந்த வெளிவிருத்தம்.

"ஆவா வென்றே யஞ்சினை ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரா
ரேகீர் நாகீ ரென்செய்து மென்றா ரொருசாரார்." (39)

இது நான்கடியால் வந்த வெளிவிருத்தம்.

## அகவற்பா.

42. அகவற்பாவின் இலக்கணம் யாது?

நாற்சீரான் வரும் அளவடியதாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி கூவிளங்கனி யெனனும் இருசீரும் கலவாது மூன்று முதலிய பல அடிகளால் வருவது அகவற்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

43. அகவற்பா எத்தனை வகைப்படும்?

நேரிசை யாசிரியப்பாவும், இணைக்குறளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறிமண்டில வாசிரியப்பாவுமென நான்குவகைப்படும்.

அகவல், ஆசிரியம் ஒருபொருட் சொற்கள்.

### 1. நேரிசை யாசிரியப்பா.

44. அந்நான்கனுள் நேரிசையாசிரியப்பா எவ்வாறு வரும்?

ஈற்றயலடி முச்சீரடியும் மற்றை அடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாகப் பெற்றுவரும்.

உ-ம். "பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியக்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே." (40)

என வரும்.

## 2. இணைக்குறளாசிரியப்பா.

45. இணைக்குறளாசிரியப்பா எவ்வாறு வரும்?

ஈற்றடியும் முதலடியும் ஒத்து நடுவடிகளில் ஒன்றும் பலவும் ஒருசீரும் பலசீருங் குறைந்துவரும்.

உ-ம். "நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே." (41)

என வரும்.

## 3. நிலைமண்டில வாசிரிப்பா.

46. நிலைமண்டில வாசிரியப்பா எவ்வாறு வரும்?

எல்லா அடியும் அளவொத்த நாற்சீரடிகளாகப் பெற்றுவரும்.

உ-ம். "வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே." (42)

என வரும்.

## 4. அடிமறி மண்டில வாசிரியப்பா.

47. அடிமறி மண்டில வாசிரியப்பா எவ்வாறு வரும்?

எல்லா அடியும் அளவொத்து எவ்வடியை முதலடி யிறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பக் கொண்டுவரும்.

உ-ம். "தீர்த்தமென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே." (43)

என வரும்.

# அகவற்பாவினம்.

## 1. ஆசிரியத்தாழிசை.

48. அகவற்பாவினம் மூன்றனுள் ஆசிரியத்தாழிசை எவ்வாறு வரும்?

பந் தமமுள அளவொத்த மூன்றடிய தாய்த் தனித்தேனும் ஒருபொருள்மேல் மூன்றடுக்கியேனும வரும்.

உ-ம். "சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னனந்தன் கண்களே
யுத்தம னைந்தெழுத் துருவங் காண்பன." (44)

இது தனித்துவந்த ஆசிரியத்தாழிசை.

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லைநம் மானுள் வருமே லவன் வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ." (45)

இது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை.

## 2. ஆசிரியத்துறை.

49. ஆசிரியத்துறை எவ்வாறு வரும்?

எனைத்துச்சீராலும் வருமடி நான்குடையதாய் ஈற்றயலடி குறைந்தேனும், முதலடியும் மூன்றாமடியுங் குறைந்தேனும வரும். அவ்வாறு வருமிடத்து இடைமடங்கியும் மடங்காதும் வரும்.

உ-ம். "கரைபொரு கானி யாற்றங் கல்லதரெம் முள்ளி வருவீராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்று போக
நரையுரு மேறு நுங்கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையோ." (46)

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

"இரங்கு குயின் முழவா வின்னிசையாழ் தேனா
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின் [னில். (47)
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவே

இது நான்கடியதாய் இடையிடை குறைந்து இடை மடக்காய்வந்த ஆசிரியத்துறை.

## 3. ஆசிரியவிருத்தம்.

50. ஆசிரியவிருத்தம் எவ்வாறு வருப?

அளவொத்த கழிநெடிலடி நான்கினால் வரும்.

### (1). அறுசீர்.

உ-ம். "விடஞ்சூ ழரவி னிடைநுடங்க
மினல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன்
கதிர்வேல் பாடு மாதங்கி

வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம்
வடிக்கண் ணீல மலர்தாந்தாம்
நடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா
மென்னுந் தன்கைத் தண்ணுமையே." (48)

இது அறுசீர்க் கழிநெடி லடியால் வந்த ஆசிரியவிருத்தம்.

(2). எழுசீர்.

"கோமுனிவ ருக்குமரி தாய்மூது மறைப்பனுவல்
கூறிய பரப்பி ரமமா
மோமெனு மெழுத்தின்வடி வாய்நட நவிற்றுபுலி
யூரன்மகு டச்ச டிலமேன்
மாமதியி னைத்தன து கோடெனவெ டுப்பமத
மாமுகன் முகக்கை தொடவத்
தா மதிப ணிப்பகையெ னுவர நதிப்புகவொர்
தோணியென விட்ட கலுமே." (49)

இது எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(3). எண்சீர்.

"அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர்
மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட
வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றாலவ்
வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தி யென்கோ
விருவருக்கு முரித்தாக வொருவ ரொன்றே
ரியற்சொவில தெனின்யான்மற் றென்சொல்கேனே."(50)

இது எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(4). ஒன்பதின்சீர்.

"வளங்கு லாவரு மணங்க ளார்விழி
மயக்கி லேழுலை முயக்கி லேவிழு மாக்தர்காள்

களங்கு லாமுட விறந்து போயிடு
காடு சேர்முனம் வீடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீர்கழ றழங்க வாடல்செய்
சோதி யானணி பூதி யானுமை பாதியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீரெமன்
விடுத்த பாசமு மடுத்த பாசமும் விலக்குமே." (51)

இது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(5). ஒன்பதின் மிக்கசீர்.

"கைத்தலத் தழற்கணிச்சி வைத்திடப் புறத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
முத்தலைப் படைக்கரத்தெ மத்தர்சிற்ச பைக்கு ணிற்கு
முக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்திலத்தி னைப்பதித்த கச்சறுத் தடிக்க னத்து
நிற்கு மற்பு தத்த னத்தி னிடையேவே
ளத்திரத்தி னைத்தொடுத்து விட்டுகெட் டயிற்க ணித்தி
லக்க ணுற்றி டச்செய் விக்கு மதுதானே." (52)

இது ஒன்பதின் மிக்கசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

## கலிப்பா.

51. கலிப்பாவிற்கு இலக்கண மென்னை?

வெண்சீர்மிகப் பெற்று மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெறுது பிறசீர்களுஞ் சிறுபான்மை கலந்து கலித்தளையும் அயற்றளையுந் தழுவி, தரவு - தாழிசை - அராகம் - அம்போதரங்கம்-தனிச்சொல்-சுரிதகம் என்னும் ஆறு உறுப்பினுள் ஏற்பனகொண்டு நாற்சீரடியால் வருவது கலிப்பா அனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

52. அக் கலிப்பா எத்தனை வகைப்படும்?

ஒத்தாழிசைக் கலிப்பாவும், வெண்கலிப்பாவும், கொச்சகக் கலிப்பாவுமென மூன்றுவகைப்படும்.

## 1. ஒத்தாழிசைக் கலிப்பா.

53. ஒத்தாழிசைக் கலிப்பா எத்தனை வகைப்படும்? அவை எவ்வாறு வரும்?

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா - அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா - நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா என மூன்றுவகைப்படும்.

### (1). வண்ணக ஒத்தாழிசை.

அவற்றுள், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா ஒரு தரவு - மூன்றுதாழிசை - அராகம் - அம்போதரங்கம் - தனிசசொல் - சுரிதகம என்னும் இவ்வாறுறுப்பும் ஒன்றன்பின் ஒன்றுறக் கொண்டுவரும். அராகமெனினும் வண்ணகமெனினும் ஒக்கும். அசையடியெனினும் அம்போதரங்கமெனினும் ஒக்கும.

அராகவுறுப்பானது அளவடி முதல் எல்லா அடிகளாலும் நான்கடி முதல் எட்டடி யளவாக வரும்.

அம்போதரங்க வுறுப்பானது நாற்சீரடியாகிய ஈரடியால் இரண்டும், ஓரடியால் நான்கும், முச்சீரடியால் எட்டும, இருசீரடியாற் பதினாறுமாகவரும. சிறுபான்மை முச்சீரடி நான்கும், இருசீரடி எட்டுமாகவும் வரும்.

உ-ம். "தோல்லுலகம் படுசுடிகைச் சுடர்மணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தரதுக் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்

சூடகத் தளிர்ச்செங்கைத் துணைவி துணைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்.

இது ஆறடித் தரவு.

ஊன்மலையுங் கோலமடங்க வீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடநாக மெட்டும்விடங் கானக மோரெட்டிந்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே.

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

இவை மூன்றும் நான்கடித்தாழிசை.

கறைவிடமுகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுபட
லெறழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை.

இலவிதழ் மதிநுத லிரதியோ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைசட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னனையடல் செயுநுதல் விழியினை.

உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளோர் புகலென முறையிட
வலைகடல் விடமுன மமுதுசெய் தருளினை.

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

இவை நான்கும் அராகம்.

அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை.
சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை.

இவை யிரண்டும் நாற்சீரடி யம்போதரங்கம். (பேரெண்)

அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை.
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை.
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை.
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

இவை நான்கும நாற்சீர் ஓரடி யம்போதரங்கம்.(அளவெண்)

முத்தொழிலின் வினைமுத னீ.
மூவர்க்கு முழுமுத னீ.
எத்தொழிலு மிறந்தோய் நீ.
இறவாத தொழிலினை நீ.
இருவிசும்பின் மேயோய் நீ.
எழின்மலரின் மிசையோய் நீ.
அரவணையிற் றுயின்றோய் நீ.
ஆலின்கீ ழமர்ந்தோய் நீ.

இவை எட்டும் முச்சீர் ஓரடி யம்போதரங்கம்.(இடையெண்)

பெரியை நீ. சிறியை நீ. பெண்ணு நீ. ஆணு நீ.
அரியை நீ. எளியை நீ. அறமு நீ. மறமு நீ.
விண்ணு நீ. மண்ணு நீ. வித்து நீ. விளைவு நீ.
பண்ணு நீ. பயனு நீ. பகையு நீ. உறவு நீ.

இவை பதினாறும் இருசீர் ஓரடி யம்போதரங்கம். (சிற்றெண்).

என வாங்கு.

இது தனிச்சொல்.

சூற்பனை கழன்ற நின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே." (53)

இது ஏழடி நேரிசை யாசிரியச் சுரிதகம்.

இவ்வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் தரவு முதலிய ஆறு உறுப்புங் குறைவின்றி வந்தன.

## (2). அம்போதரங்க வொத்தாழிசை.

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா மேற் சொல்லப்பட்ட தாழிசை முதலிய ஆறனுள் அராகமொழிந்த ஐந்து உறுப்பையுங் கொண்டுவரும். இதற்குதாரணம மேற் காட்டிய வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராக மொழித்துக் காண்க.

## (3). நேரிசையொத்தாழிசை.

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா தரவு முதலிய ஆறனுள் அராகம் - அம்போதரங்க மொழிந்த நான்குறுப்பையுங் கொண்டுவரும். இதற்குதாரணம் மேற் காட்டிய வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராகத்தையும் அம்போதரங்கத்தையு மொழித்துக் காண்க.

## 2. வெண்கலிப்பா.

54. வெண்கலிப்பா எத்தனை வகைப்படும்? எவ்வாறு வரும்?

வெண்கலிப்பாவும் - கலிவெண்பாவுமென இருவகைப் படும்.

## (1). வெண்கலிப்பா.

அவற்றுள், வெண்கலிப்பா கலித்தளை விரவி ஈற்றடி முச்சீரான் முடியும்.

உ-ம். "சேல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம்பெருமானின
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக்கொசிந்தொல்குமருங்குலவா
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமா
லவ்வண்ண யாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று." (54)

## (2). கலிவெண்பா.

கலிவெண்பா வெண்டளை தழுவி ஈற்றடி முச்சீரான் முடியும.

உ-ம். "சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்யா மாடு
மணற்சிற்றிற் காலிற்சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா

னுண்ணுநீர் விக்கிநு னென்றேனு வன்னையுந்
தன்னைப் புறம்பழிசது நீவமற் றென்னைக்
கடைக்கண்ணுற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்." (55)

## 3. கொச்சகக்கலிப்பா.

55. கொச்சகக் கலிப்பா எத்தனை வகைப்படும்? எவ்வாறு வரும்?

தரவு கொச்சகக்கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறுழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறுழிசைக்கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என ஐந்து வகைப்படும்

### (1). தரவு கோச்சகம்.

அவற்றுள், தரவுகொச்சகக்கலிப்பா தரவு ஒன்று பெற்று வருவதாம்.

உ-ம். "அஞ்சம் போனடை............நெஞ்சே" (9)

இது இவ்வாறு தனித்து வருதலன்றித் தனிச்சொல்லுஞ் சரிதகமும் பெற்று வருதலுமுண்டு.

### (2). தரவிணைக் கோச்சகம்.

தரவிணைக் கொச்சகக்கலிப்பா இரண்டு தரவைக் கொண்டு வருவதாம்.

உ-ம். "வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்
கொடிபடு வரைமார்பிற் கூடலார் கோமானே."

இது தரவு.

என வாங்கு.

இது தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோ மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே.

இது தரவு.

அதனால்.

இது தனிச்சொல்.

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிக் தெண்ணிய வாறே.'' (56

இது சுரிதகம்.

இது இடை யிடையே தனிச்சொற்பெற்று ஆசிரியச்
சுரிதகத்தான் முடிந்தது.

(3). சிஃறாழிசைக் கோச்சகம்.

சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா சில தாழிசைக
ளோடு பிறவுறுப்புக்களையுங் கொண்டுவரும்.

உ-ம். ''பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்
[தோன்றிக
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடை
[சூழ
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே

இது தரவு.

ஆங்கொருசார்

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனைப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார்

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனைப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே.

ஆங்கொருசார்
மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோலகொண்ட சேவலங் கொடியவனைப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே.

இவை மூன்றுந் தாழிசை.

அஃதான்று

இது தனிச்சொல்.

கோடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமா
னின்புக ழொருவன் செம்பூட் சேஎ
யென்றுநனி யறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறியலாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே."

இது சுரிதகம்.

இது தனிச்சொல் இடையிடைபெற்று ஒரு தரவும் மூன்று தாழிசையுஞ சுரிதகமுங்கொண்டு நேரிசையொத்தாழிசைக்கலியிற் சிறிது வேறுபட்டு வந்தது.

(4). பஃறாழிசைக் கொச்சகம்.

பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா பல தாழிசைகளோடு மற்ற உறுப்புக்களையுங் கொண்டு வரும்.

உ-ம். "தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடனிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியொப் பிலவயின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ.

இது தரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.

தகைநல மிவள்வாடத் தருப்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவைவாடி வருந்தியில் விருப்பாளோ.

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ.

நாம்பிரியே மினியென்று நறுநதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாயோ.

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

இவை ஆறுந் தாழிசை.

எனவாங்கு

இது தனிச்சொல்.

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே.
அதனால், விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே."

இது சுரிதகம்.

இது நாலடித்தரவும், இரண்டடித் தாழிசை ஆறும், தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

## (5). மயங்கிசைக் கோச்சகம்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் பலவாறு மயங்கிவரும்.

உ-ம். "மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சா றுறைவகேள்.
மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சா றுறைவகேள்.

இவை யிரண்டுந் தரவு.

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.
கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோ
டெண்பனிநீ ருகக்கண்டுந் திரியலனே யென்றியால்.
நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றுசிந்த புறவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.
கனைகுரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்.
வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்.
கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.

இவை ஆறுந் தாழிசை.

அதனால்

இது தனிச்சொல்.

அடும்பயி லிறும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.
செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொருங் கடல்.
புலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில.

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ
ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.
தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.
மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.
காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
எதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.
இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

இவை ஆறுந் தாழிசை.

எனவாங்கு

இது தனிச்சொல்.

பகைபோன் றதுதுறை பரிவாயின குறி
நகையிழந் ததுமுகம் நனிநாணிற் றுளம்
தகை யிழந்தன தோள் தலைசிறந்தது துயர்
புகை பரந்தது மெய் பொறையாயிற் றென்னுயிர்

இவை இருசீர் ஓரடி யெட்டம் போதரங்கம்.

அதனால்

இது தனிச்சொல்.

இனையது நினையால் அனையதூ பொழுதால்
இனையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே."

இது சுரிதகம்.

இது தரவிரண்டும் தாழிசையாறும் தனிச்சொல்லும் அராகம் நான்கும் பெயர்த்தும் ஆறுதாழிசையும் தனிச்சொல்லும் இருசீரோரடியெட் டம்போதரங்க வுறுப்பும் பெற்று நாணகடி யாசிரியச் சுரிதகத்தாலிற்றுக் கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையான் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

56. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவிற்கு உறுப்பாக வருந் தரவு தாழிசைகளுக்கு அடிவரையறை யாமாறென்னை?

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாக்களுக்குத் தரவு ஆறடியால்வரும். மற்றைக் கலிப்பாக்களுக்குத் தரவு மூன்றடி முதலிய பல அடிகளால் வரும்.

தாழிசை யொன்றற்கு அடி இரண்டேனும் மூன்றேனும் நான்கேனும் வரும்.

# கலிப்பாவினம்.

## 1. கலித்தாழிசை.

57. கலிப்பாவினம் மூன்றனுட் கலித்தாழிசை எவ்வாறு வரும்?

இரண்டுமுதலிய பல அடிகளால் ஈற்றடிமிக்கு ஏனையடி தம்முள் அளவொத்து நிற்பத் தனித்தேனும் ஒரு பொருள் மேல் மூன்றடுக்கியேனும் வரும்.

உ-ம். "இருநூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
யொரு கூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலமபேல் வாழி மடநெஞ்சே."

இது ஈற்றடி மிகுந்து தனித்துவந்த நான்கடிக் கலித் தாழிசை.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே."

எனச் சிறுபான்மை ஏனையடிகள் ஒவ்வாது வருதலுமுண்டு.

"செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னனை
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்."

இது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிக்கு வந்த கலித்தாழிசை.

## 2. கலித்துறை.

53. கலித்துறை எவ்வாறு வரும்?

ஐஞ்சீரடி நான்கினைக் கொண்டுவரும்.

உ-ம். "யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே."

## 3. கலிவிருத்தம்.

59. கலிவிருத்தம் எவ்வாறு வரும்?

நாற்சீரடி நான்கினைக் கொண்டுவரும்.

உ-ம். "வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னுய்தலை யொண்சுட ராழியி னன்றமர்
வாய்தலை னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய்."

என வரும்.

60. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவினுங் கலித்துறையி னும் வேறுபட்டுவருங் கலிப்பாவுங் கலித்துறையுமுளவோ?

உளவாம். அவை கட்டளைக்கலிப்பாவுங் கட்டளைக்கலித் துறையு மெனப் பெயர்பெறும்.

## 4. கட்டளைக் கலிப்பா.

இது முதற்கண் மாச்சீர்பெற்று நாற்சீரான் வருவது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாக வும், அவ்வடி நான்கு கொண்டு வரும். அரையடிக் கெழுத் து முதலசை நேராயிற் பதினொன்றும், நிரையாயிற் பன் னிரண்டுமாம்.

உ-ம். "சொல்லி னீரிவ ராசைப்பட் டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையையோ
புல்லு வாரெவ் விதத்தினு மென்றுளம்
பூரித் தேயிருந் தேன்மட மங்கைமீர்

செல்லு லாம்பொழிற் கூவ நகருறை
திருவிற் கோல ரினுமரு ளாமையா
லல்ல தேத திகம்பர ரென்பொரு
ளறையின் வன்கண்ண ராவரென் மட்டுமே.''

## 5. கட்டளைக் கலித்துறை.

இது முதற்சீர் நான்கும் வெண்டளை பிழைபாமனிற்பக் கடையொருசீரும் விளங்காயாகி வரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டு வரும்.

அது விளங்காயாய் வருவதன்றிச் சிறுபான்மை வேறு பட்டும் வரும்.

ஓரடிக் கெழுத்து முதலசை நேராயிற் பதினாறும் நிரையாயிற் பதினேழுமாம.

உ-ம். "சிலைமலி வாணுத லெங்கைய தாக மெனச்செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத்தர் தான்றலை மன்னர்தில்லை
யுலைமலி வேற்படை யூரனிற் கள்வரில் லென்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே."

என வரும்.

# வஞ்சிப்பா.

61. வஞ்சிப்பாவின் இலக்கணம் யாது?

பெரும்பாலுந் தன்தளையுஞ் சிறுபான்மை பிறதளையுந் தழுவி இருசீரடியாலேனும் முச்சீரடியாலேனும் மூன்றுமுதலிய பல அடிகளைக்கொண்டு தனிச்சொற் பெற்று அகவற் சுரிதகத்தான் முடிவதாம.

## 1. குறளடி வஞ்சிப்பா.

உ-ம். "பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்

வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும
நாளும்
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையினே."

## 2. சிந்தடி வஞ்சிப்பா.

உ-ம். "எறிவெண்டிரைக் கடல் சூழ்புவி யெளிதெய்தினு
மிறவத்துடைப் பொழுதுய்த்திட லுளதென்னினு
மறிவினறிறத் துயர்ந்தோர்படி றிசைகின்றிலா
அதனால்
முன் வரு மின்பினு முறைப்பட நாடிற்
பின் வரு மிடர் மிகப் பெரிதா மெனவே."

# வஞ்சியினம்.

## 1. வஞ்சித்தாழிசை.

62. வஞ்சியினம் மூன்றனுள் வஞ்சித்தாழிசை எவ்வாறு வரும்?

இருசீரடி நான்கு கொண்டது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வரும்.

உ-ம். பிணியென்று பெயராமே
துணிவின்று தவஞ் செய்வீ
ரணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே.

என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்

நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே.

அரிதென்று பெயராமே
னைநின்று தவஞ்செய்வீ
ருருமன்ற லுமைபாகன்
றிருமன்று பணியீரே.''

## 2. வஞ்சித்துறை.

63. வஞ்சித்துறை எவ்வாறு வரும்?

இருசீரடி நான்கு கொண்டு வரும்.

உ-ம். ''பேரறி வன்னுன்
சார விருந்த
வூரினு மில்லென்
றூர விகழ்ந்தே.''

## 3. வஞ்சிவிருத்தம்.

64. வஞ்சிவிருத்தம் எவ்வாறு வரும்?

முச்சீரடி நான்கு கொண்டுவரும்.

உ-ம். ''சார்ந்த ஞெகிய தாழ்மொழி
காய்ந்த வேலிந காதிலும்
போந்த போன்று புகுந்திட
மாந்த ராகுல மன்னினர்.''

# மருட்பா.

65. மருட்பா எவ்வாறு வரும்?

மருட்பா, புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉவென்னும் நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாக ஆசிரியப்பா ஈறாகவருவனவாம்.

அவற்றுள் கைக்கிளை மருட்பாவின் ஈற்றில் வரும் ஆசிரியம இரண்டேயடியினதாய் அவ்விரண்டடியுள்ளும ஈற்றயலடி முச்சீரதாய் வரும்.

## 1. புறநிலைவாழ்த்து.

உ-ம். "தென்ற லிடைபோழ்ந்த தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோனூர்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப - வென்றும்
திரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே."

இது வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர் செல்வமோடொருகாலைக் கொருகாற்சிறந்து பொலிக வென்றமையாற் புறநிலை வாழ்த்து மருட்பா.

## 2 கைக்கிளை.

உ-ம "திருநுதல் வேர்வரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயு - மரிபரந்த
போகித முண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே."

இது துணிதலை நுதலிய வொருதலைக் காமமாதலாற் கைக்கிளை மருட்பா. இதனுள் ஆசிரியவடி யிரண்டேயாய் அவற்றுள்ளும் ஈற்றயலடி முச்சீராய் வருவது காண்க.

## 3. வாயுறை வாழ்த்து.

உ-ம். பலமுறை யோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னுண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ளில்லா

விலங்கு மெறிபடையும் வீரமு மன்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலன்செய் புனைகலனே டிவ்வாற னாலும்
விலங்கி லொருங்கூற்றை விலக்கலு மாகா
தனைததாத னீயிநங் காண்டிர் நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
சேறிநீ ரொழுகிற் சென்றுபயன் றருமே."

இது மெய்ப்பொருள் சொன்னமையால் வாயுறைவாழ்த்து மருட்பா.

## 4. செவியறிவுறூஉ.

உ-ம். "பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொலயானை தேரொடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம பொலியத் தொலையாப்
படுகளம பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிறல்
ஆழி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்று
மீர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
யுடைய வுழவரை நெஞ்சனுபகக் கொண்டு
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டம
காட்டு மமைச்சரை யாறறச் தெளியல்
அமைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்பற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப்பட் டேற்க வறர்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்

கற்றார்க் கிளைஞனாகிக் கல்லார்க் கமைந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துயிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறைக்கு மறிவனாய் மற்றும்
இவையிவை வீயா தொழுகி னிலையாப்
பொருகடலாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே"

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் வியந்தொழுகுதல் கடனென அரசர்க் குரைத்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா.

## நூற்பா.

66. நூற்பா எவ்வாறு வரும்?

சில்வகை யெழுத்துக்களாலாகிய சொற்றொடராய்ப் பல்வகைப் பொருள்களை விளக்கித் திட்பமும் நுட்பமும் அமைந்துவரும்.

உ-ம். "எழுத்தெனப் படுவ
அகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே"

என வரும்.

## கூன்.

67. கூனென்ப தென்னை?

வெண்பா முதலிய செய்யுட்களின் முதலடியில் ஓரோ விடத்துப் பொருள் படத் தனித்து நிற்பது கூனாம். அது வஞ்சிப்பாவின் முதற்கணன்றி இடையிலும் இறுதியிலும் வரும்.

உ-ம். "உதுக்காண்
சுரத்தாறு யண்ணலைச் சுவாணமாப் பூதன்
பரந்தாறுப் பல்புகழைப் பாடி,"
எனவும்,
"அவற்றுள்,
அ இ உ எ ஒக் குறிலைந்தே"
எனவும் வரும.

யாப்பிலக்கணம்.
முற்றிற்று.